இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 10-07-2023



# மகளிர் மாண்பு காக்கும் முதல்வர்!

‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ - தொடங்கப்பட இருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளர்கள். திராவிட மாடல் அரசின் மாபெரும் சமூக வளர்ச்சித் திட்டமாக இது அமைந்துள்ளது.

**பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று இத்திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. ஒரு கோடி குடும்பத் தலைவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள். ஒரு கோடி குடும்பங்களுக்கான கலைஞர் நிதி - மு.க.ஸ்டாலின் நிதி - திராவிட மாடல் அரசின் நிதி போய்ச் சேர இருக்கிறது.**

நீதிக்கட்சி ஆட்சி காலத்தில்தான் - 1921 ஆம் ஆண்டு பெண்களும் வாக்களிக்கலாம் என்ற சட்ட உரிமை தரப்பட்டது. தந்தை சொத்தில் மகளுக்கும் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1989 ஆம் ஆண்டு பிறப்பித்தார்கள். பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர். உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு தரப்பட்டது. மகளிர் சொந்தக் காலில் நிற்கவும், அவர்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றவர்களாக வலம் வரவும் மகளிர் சுய உதவிக் குழுக்களை தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கில் தொடங்கி வைத்தவர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்ததும் முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்தது ஆகும். இதுவரை பலநூறு கோடி பயணங்களை பெண்கள் கட்டணமில்லாமல் மேற்கொண்டுள்ளார்கள். இந்த வரிசையில் தொடங்கப்பட்ட புதுமைப் பெண் என்ற திட்டமும் தொடங்கப்பட்டு, அதற்கு மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது. அரசு பள்ளியில் படித்து, கல்லூரிக் கல்வியை அடையும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் இது. பணமில்லாமல் மகளை படிக்க வைக்கத் தயங்கும் பெற்றோரின் கவலையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது இந்தத் திட்டம். இதன் மூலமாக அரசுப் பள்ளி மாணவிகளின் கல்லூரி நுழைவு அதிகம் ஆகி இருக்கிறது. அதைவிட, மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் பள்ளிக் கல்வியை முடித்து கல்லூரிக்கு போக முடியாமல் இருந்த மாணவிகள் இந்த ஆண்டு கல்லூரியில் சேர முன் வந்துள்ளார்கள். சமூக மாற்றம் என்பது இதுதான். இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம் இதுதான். அதில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

அடுத்து இதோ வந்துவிட்டது... ஒட்டுமொத்த பெண் குலத்தின் விடியலான ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’!

**“தொடக்க காலத்திலிருந்தே தாய்வழிச் சமூக முறைதான், மனித குலத்தை வழிநடத்தி வந்திருக்கிறது. உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறிய போதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதாரச் சுதந்திரத்தை மீட்க எத்தனையோ சமூகச் சீர்திருத்தவாதிகள் பணியாற்றினார்கள்”** என்று ஆயிரமாண்டு வரலாற்றை மிகச் சுருக்கமானச் சொன்ன முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்குலத்தை முன்னேற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட அனைத்து திட்டங்களையும் வரிசைப்படுத்தினார். இருப்பினும் இன்றைய சமூக உண்மையையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.

**“இப்படி எண்ணற்ற திட்டங்களை மகளிருக்காக நாம் செயல்படுத்தி வந்தாலும், உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் (Global Gender Gap Report - 2023), தரவரிசைப் படுத்தப்பட்ட 146 நாடுகளில், இந்தியா 127 - ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதும் மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். இதற்கு முக்கிய காரணமாக பெண்களின் பொருளாதார நிலைமையும், கல்வி நிலையுமே உள்ளன. இந்த இரு காரணங்களில் முன்னேற்றம் காணாமல் சமூகத்திலும், குடும்பங்களிலும் மகளிர் உரிய அங்கீகாரம் பெற இயலாது.**

**இதற்காகத்தான் நமது அரசு பெண்களின் உயர்கல்வியினை இடைவெளியின்றி தொடர்ந்து பயில உதவும் வகையில், உயர் கல்வியினை நிறைவு செய்யும்காலம் வரை, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் “புதுமைப்பெண்” என்ற முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி அதன் மூலம் மாதந்தோறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் மாணவியர் பயனடைந்து வருகிறார்கள். இந்த வரிசையில் மகளிருக்கு மகுடம் சூட்டும் வகையில் மகளிர் உரிமைத் தொகையை மாதம்தோறும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது” என்று சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள்.**

உலகளாவிய பாலின இடைவெளி குறியீட்டை உலகளாவிய பொருளாதார மன்றம் (WEF) வெளியிட்டு வருகிறது. பாலின சமத்துவத்தை உருவாக்க வேண்டுமானால் பெண்களின் பொருளாதார வளம் அதிகமாக வேண்டும். அவர்களுக்கான வாய்ப்புகள் அதிகமாக வேண்டும். அவர்களது கல்வித் திறன் அதிகரிக்க வேண்டும். உடல் நலம் சீராக வேண்டும். அவர்கள் உயிர்வாழும் காலம் அதிகமாக வேண்டும். இந்த அளவீடுகளைக் கொண்டே பாலின சமத்துவம் வரையறுக்கப்படுகிறது.

**தமிழினத் தலைவர் கலைஞரும் - திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் உருவாக்கிக் கொடுத்த திட்டங்களின் உண்மையான முழுமையான நோக்கம் என்பது பாலின இடைவெளியைக் குறைக்கும் திட்டங்கள் ஆகும். சரிநிகர் சமூகமாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற வேளாண் வணிகத் திருவிழாவில், 2022-23-ஆம் ஆண்டில் வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிக்கான விருதினை கடலூர் மாவட்டம், பண்ருட்டியை சேர்ந்த விவசாயி ம.இராமகிருஷ்ணனுக்கு விருதும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் வழங்கினார்.இவ்விழாவில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து நடத்திய மாபெரும் கால்பந்தாட்ட போட்டி ராயப்பேட்டை நியூ காலேஜ் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மாநில துணைச் செயலாளர்கள் பொன்.கௌதமசிகாமணி எம்.பி., எஸ்.ஆர். பார்த்திபன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், த.வேலு, நா.எழிலன், மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.சிற்றரசு, சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் மதன்மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.78.03 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

*அரியலூர், ஜீலை 10 -*

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் ரூ.78.03 கோடி மதிப்பீட்டில் 10 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னே ற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி ஆண்டிமடம் ஒன்றியம், மருதூர் ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகு சார்பில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் திட்டத் தின் கீழ் ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் மருதூர் நாகல்குழி சாலை வரை தரம் உயர்த்துதல் பணியினை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.34.67 இலட்சம் மதிப்பீட்டில் 1 கி.மீ நீளத்திற்கு மருதூர் தெற்குப் பட்டி சாலை அமைக்கும் பணியினையும்;, கொடுக்கூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.222.86 இலட்சம் மதிப்பீட்டில் 2.63 கி.மீ நீளத்திற்கு கொடுக்கூர் பொன்பரப்பி சாலை அமைக்கும் பணியினையும், வல்லம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.78.62 இலட்சம் மதிப்பீட்டில் 1.85 கி.மீ நீளத்திற்கு வல்லம் அய்யூர் சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட் களை கொண்டு விரைவில் முடித்திட வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சம்மந்தப்பட்ட அலுலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கோட்டப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள் திருச்சி) பெ.வடிவேல், நெடுஞ்சாலைத் துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டப் பொறியாளர் உத்தண்டி, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை நபார்டு உதவிக் கோட்டப் பொறியாளர் அரியலூர் வி.பி.சரவணன், ராஜா, கருணாநிதி, உதவி பொறியாளர்கள் விக்னேஷ், முரளிதரன், இளவரசன், ஸ்ரீதேவி, சிவராஜேஸ்வரி சிவசுப்பிரமணி யன்,

ஆர்.கலியபெருமாள், ரெங்க.முருகன், பூ.செல்வராஜ், எஸ்.எஸ்.சிவகுமார், தனசேகரன், தன்ராஜ்,சஞ்சீவி குமார், சித்திர வடிவு செல்வம், விசாலாட்சி சிவகுமார் தேவனூர், பன்னீர்செல்வம் மருதூர், டேவிட் கூவத்தூர், கிரேஷ் சுப்ரமணியன்,டி.எம். டி.அறிவழகன், பானுமதி இராஜேந்திரன், தங்கராசு, ராணி, செந்தில்குமார், அறிவழகன், சா.சேகர், பாலா, செல்வகுமார், கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.







கலைஞர் 100 1924 - 2023

வேளாண்மை-உழவர் நலத்துறை

08.07.2023 அன்று வேளாண் வணிகத் திருவிழா 2023

தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின்

கண்காட்சியை பார்வையிட்டு ஊக்குவித்தமைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு

நன்றி ! நன்றி ! நன்றி !










இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம்

*அனைவரும் வாரீர் !*

*விவசாயிகளுக்கு ஆதரவு தாரீர் !*

திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.
வேளாண்மை - உழவர் நலத்துறை

திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், அவர்கள்
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

உழவரை உயர்த்திடுவோம் !! உலகினில் உயர்ந்திடுவோம் !!

செ.ம.தொ.இ./762/வரைகலை/2023